# ஆங்கிலேயர் ஆட்சியில் இந்திய சிறுகைத்தொழில்களின் நிலை

**ஏ.எம்.எம்.முஸ்தபா**
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*முகாமைத்துவத் துறை*
*இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.*
Correspondence: amustafa@seu.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

*இந்திய வரலாற்றில் ஆங்கிலேயர்களின் ஆட்சிகாலமாகிய கி.பி. 1600 முதல் 1947 வரையிலான காலம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். அக்கால சமூக, அரசியல் மற்றும் பொருளாதார கூறுகளை ஆராயும்போது இதனை தெளிவாக காண முடியும். ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிய முழுமையான அறிவு வேண்டுமெனில் அதன் சமூக மற்றும் அரசியலை தெள்ளத்தெளிவாக புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இந்தியாவின் நீண்ட வரலாற்று பண்பாட்டினை உலகெங்கும் கொண்டு செல்வதற்கு வரலாற்றில் வர்த்தகமும் வெளிநாட்டு வணிகரும் முக்கிய காரணிகளாக திகழ்ந்தன. இந்திய கைத்தறி நெசவு, விவசாயம் மற்றும் பிற கைத் தொழில்களும் இலாபமீட்டும் ஒன்றாகவே இருந்தது. ஆனால் ஐரோப்பியர்களின் வருகையால் நாட்டில் வர்த்தகப் போட்டிகளும், ஆதிக்கப் போட்டிகளும் அதிகரிக்கத் தொடங்கின. கி.பி. 1600ல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி காலூன்றிய பிறகு இக்குழப்பங்கள் மேலும் அதிகரித்தன. கிழக்கிந்திய கம்பெனியின் பொருளாதார கொள்கையாலும் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளாலும் இந்திய கைத்தொழில்கள் எவ்வாறு பாதிப்படைந்தது என்பது பற்றியும் அதனால் சமூக மற்றும் அரசியல் தளங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் குறித்தும் இக்கட்டுரை பேசுகிறது. மேலும் ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பொருட்டு இந்தியாவை எவ்வாறு பயன்படுத்திக் கொண்டனர் என்பது குறித்தும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் இக்கட்டுரை விளக்குகிறது.*

**பிரதான சொற்கள்:** ஆஙிகிலேயர் ஆட்சி, இந்தியா, சிறுகைத்தொழில்

## 1. இந்தியாவில் ஐரோப்பிய வருகை

*1491ம் ஆண்டு போர்ச்சுக்கீசியரான வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டையை அடைந்தார் இவர்களின் முக்கிய நோக்கம் கிறிஸ்தவத்தை பரப்புவது, வாசனை பொருட்களை தங்கள் நாட்டிற்கு கொண்டு செல்வதுமேயாகும். இவர்களைத் தொ்டர்ந்து டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனிஷ்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் வருகையென ஒட்டுமொத்த இந்திய அரசியல், சமூக, பொருளாதாரத்தில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 1757ல் பிளாசி மற்றும் 1764 ம் ஆண்டில் பக்சார் போருக்குப் பின் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வணிகத் திலும், அரசியலிலும் ஸ்திரமாக காலூன்றியபின் இந்திய சிறு மற்றும் கைத்தொழில்களில் மாற்றம் ஏற்பட்டது.*

## 2. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியும் இந்தியாவும்

*31.12-1600 இல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியானது நிறுவப்பட்டு கீழைத்தேச நாடுகளுக்கிடையில் வர்த்தகத்தில் ஈடுபடத்தொடங்கியது. இக்கம்பெனியானது இந்தியாவை பொறுத்தவரையில் 1600-1947 வரை பல தொடர்புகளைக் கொண்டிருந்துள்ளது. இது 1609இல் இந்தியாவின் சூரத் பகுதியிலும், 1635 இல் மெட்ராஸிலும், 1665இல் பம்பாயிலும் வர்த்தக பண்டகசாலைகளை அமைத்துக் கொண்டது. இதில் 1600-1757 வரை வெறுமனே ஓர் வர்த்தக அமைப்பாகவும் 1757-1947 வரை அரசியல் ரீதியான தொடர்புடன் இருந்திருக்கின்றது.ஆரம்பத்தில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு பல நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் அந்நிலையை தாக்குப்பிடித்து பிற்காலத்தில் வெற்றிவாகை சூடியது.*

- *டச்சுக்காரர்களின் அச்சுறுத்தல்*
- *கடற்கொள்ளைகள்*
- *உள்வாரியாக இங்கிலாந்தில் ஏற்பட்ட எதிர்ப்பு*

இந்திய மண்ணில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் பலம் 1707 ஆண்டிற்கு பின்னரே அதிகரித்தது. அதற்கு முற்பட்ட இந்தியாவை மொகலாயப் பேரரசே ஆட்சி செய்தது. இக்காலப்பகுதியில் அரேபியா, பிரான்ஸ், சீனா, டச்சு, இலங்கை என பல நாடுகளும் இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பில் ஈடுபட்டிருந்தன. இதன் பின்னரே இங்கிலாந்தும் இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்தின. 1708இல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு போட்டியாக இங்கிலாந்தில் நிறுவப்பட்ட கம்பெனியானது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியுடன் இணைக்கப்பட்டது. அதன் பின்னர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி வளர்ச்சிக்கு இந்திய மண்ணில் எவ்வித இடர்பாடுகளும் ஏற்படவில்லை. எனினும் வெளிநாட்டு வர்த்தகர்கள் இந்தியாவை சுரண்டுவதனை தடுக்க பல வகை சட்டங்கள் இயற்றப்பட்டன. வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்கள் மொகலாய சட்டத்திட்டங்களுக்குட்பட்டும் பேரரசின் மேலாட்சியை மதித்துமே வர்த்தகர்கள் இந்திய மண்ணில் வர்த்தகம் செய்தனர்.

எனினும் 1707 ம் ஆண்டுக்கு பின்னர் மொகலாய பேரரசு மறைந்த போது பதவிக்காக பல்வேறு குழுக்கள் போட்டி பூசல்களில் ஈடுபட்டிருந்தன. அவை தம்முடைய வெற்றிக்காக பல்வேறு வெளிநாட்டவரையும் அரவணைத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டன. இந்நிலைமையே இந்தியாவின் சுதந்திரம் கைநழுவிப் போவதற்கும் வாய்ப்பாக அமைந்தது. இந்நிலைமையினை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி மிகவும் சிறந்த முறையில் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது. இதன் பின்னர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு சம எதிரான பலம் கொண்டிருந்த பிரான்சின் வர்த்தகக் கம்பெனியும் 1757 இல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியால் தோற்கடிக்கப்பட்டது. இதன் பின்னர் எவ்வித இடர்பாடுகளும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு ஏற்படவில்லை.

18ம் நூற்றாண்டின் அரைப்பகுதிக்குப் பிறகு இந்தியா முழுவதும் பிரித்தானியரின் கைக்குள் வந்தது. சமகாலத்தில் இங்கிலாந்திலும் தொழிறப்புரட்சி ஏற்பட்டது. 1757-க்குப் பின்னர் வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய பிரதேசங்கள் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. ஆரம்பத்தில் இந்தியா ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியாலும், பின்னர் பிரித்தானியாவாலும் ஆளப்பட்டது.

## 3. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியும் இந்தியாவின் பொருளாதாரமும்

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியில் முக்கியமாக இந்திய பொருளாதாரம் அடிப்படை கீழ்கண்ட அடிப்படைகளில் பிரிக்கப்பட்டது. அவை உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம், விவசாயம் என்பனவாகும்.

### 3.1 வெளிநாட்டு வர்த்தகம்

ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கு வந்ததும் இந்தியாவுடனான வர்த்தகத்தில் தனியுரிமை பேணுவதில் தீவிர அக்கறை காட்டியது. வேறு நாடுகள் அல்லது வர்த்தகர்கள் வர்த்தகம் செய்வதை தடைசெய்தது. இதன் விளைவாக இந்தியாவுக்கு ஏற்பட்ட பேரிழப்பு இதுகூடியவரையும் வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு போட்டி அடிப்படையில் விற்கப்பட்ட பெருமளவு இலாபமுரைத்த பொருட்களின் விற்பனை அடியோடு ஒழிக்கப்பட்டது. மேலும் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் இந்தியர்களுக்கு மொத்த விற்பனை செய்யப்படலாம் என்ற சட்டம் நீக்கி விற்பனை செய்யலாம் என்றும் அவ்வாறே ஏற்றுமதிக்கென்று எவ்விதமும் கொள்ளவு செய்யலாம் என்ற நிலையால் சுதேச வர்த்தகர்களுக்கு இருந்து வந்த உரிமை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக வர்த்தகத்துறையை விட்டு விவசாயத் துறையை நாட வேண்டிய சூழ்நிலை உருவானது.

### 3.2 உள்நாட்டு வர்த்தகம்

உள்நாட்டில் வர்த்தகம் செய்து வந்த இந்திய சுதேச வர்த்தகர்கள் ஒடுக்கப்பட்டனர். இந்தியாவில் சுதேசிகள் வர்த்தகம் செய்வதற்கு உள்நாட்டில் தீர்வை செலுத்த வேண்டியிருந்தது. அதாவது

இந்திய மண்ணில் ஆங்கிலேயர்கள் மட்டுமே தீர்வையற்ற வர்த்தகம் செய்தனர். இந்தியாவின் உள்ளூர் கிராமங்களிலும் கம்பெனி சில்லறை வியாபாரம் செய்யலாம் என்ற நிலைவந்தது. அத்துடன் உள்நாட்டிலிருந்து ஏற்றுமதிப் பொருட்களை ஆங்கிலேயர் பெற்றனர். சுருங்கக்கூறின் சுதேச வர்த்தகர்கள் தமது இலாப வாய்ப்புகளை அடியோடு இழந்தனர். போட்டி அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்யக்கூடிய விற்பனையாளர்கள் மாத்திரமின்றி உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டனர். அதாவது கம்பெனி மட்டுமே ஏற்றுமதி செய்யும் தனியுரிமையை பெற்றது. கம்பெனி இலாபமீட்டுவதையே முக்கிய குறிக்கோளாக கொண்டிருந்தது.

## 4. ஆங்கிலேயர் ஆட்சியும் பருத்தி நெசவு கைத்தொழிலும்

இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிகாலத்தில் முக்கியமானதும் அதிக இலாபம் தரும் தொழிலாகவும் பருத்தி நெசவுக் கைத்தொழில் இருந்துவந்தது. அதாவது இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கு முன் சர்வதேச தரத்தில் பருத்தியை உற்பத்தி செய்யும் நாடாக இந்தியாவே காணப்பட்டது. ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியாவின் பருத்திக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பு காணப்பட்டது. இதன் விளைவாக ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி தன்னுடைய இலாபத்துக்காக பருத்தி நெசவு ஏற்றுமதியில் தனியுரிமையை அனுபவிக்க முனைந்தது.

இந்தியா ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்படும்முன் இந்தியாவில் பருத்தி, பட்டு நெசவின் வளர்ச்சி சர்வதேச தரத்தைக் கொண்டவையாகக் காணப்பட்டது. குறிப்பாக வேறு எந்த கீழேத்தேய நாட்டுடனும் ஒப்பிட முடியாத தரத்துடன் காணப்பட்டது. அதாவது இயந்திரங்களைப் பயன்படுத்தியதற்கு முன்பே கைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த வேளை இந்தியா நெசவு உற்பத்தியில் அடைந்திருந்த முன்னேற்றம் இன்றியமையாததாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளில் இந்திய நெசவுப் பொருட்களுக்கு சர்வதேச மதிப்பு காணப்பட்டது. எகிப்திய மன்னர்களின் ஜனாஸா நல்லடக்கத்திற்கு இந்தியாவிலிருந்தே துணிகள் பெறப்பட்டது. 1757 இன் பின்னர் பருத்திப் பொருட்களுக்கான கொள்ளளவு விலைகளை இவர்களே தீர்மானித்தனர். இவர்கள் பருத்திப் பொருட்களை மிக குறைந்த விலையில் பெற்று ஏற்றுமதி செய்து அதிக இலாபமீட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். பருத்தி நெசவுக்கைத்தொழில் உற்பத்தி குறித்து முற்பணங்கள் கம்பெனியால் வழங்கப்பட்டன. கடன் வழங்கும் போது உடன்படிக்கையில் கைச் சாத்திடப்பட்ட பின்னரே வழங்கப்பட்டது. இதன் தரம், விலை என்பன முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையை பூர்த்தி செய்யும் வரையில் நெசவாளர் வேறு நெசவிலோ அல்லது வேறு உற்பத்தியிலோ ஈடுபடக்கூடாது என்றிருந்தது. இவ்வுடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த விலைகள் வெறுமனே உற்பத்தி செலவை மட்டுமே உள்ளடக்கியிருந்தன. இவற்றின் விளைவாக பல சுதேச வர்த்தகர்கள் நெசவுத்தொழிலையே கைவிட்டனர். இவர்கள் விவசாயத்துறையில் போய் அடைக்கலம் பெறத் தொடங்கினர். பட்டு நெசவுத் தொழிலிலும் இதனைவிட கடினமான செயற்பாடு காணப்பட்டது. பட்டறைமுறையில் பட்டு நெசவு மேற்கொள்ளப்பட்டது. இதன்போதும் நெசவாளர் மிகவும் இம்சிக்கப்பட்டனர். இது இறுதியில் பட்டு நெசவின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. இதன் விளைவாக 1763க்கு முன்னரே இந்தியாவில் பருத்தி, பட்டு நெசவுத் தொழில்கள் வீழ்ச்சியடைந்தன.

1757இன் பின் இந்தியாவில் நெசவுக் கைத்தொழில் மிக மோசமான நிலையை அடைந்தது. இதற்குக் காரணம் கம்பெனியின் திறனற்ற நடத்தைகள் மாத்திரமின்றி கம்பெனி இந்தியாவில் தனது ஆட்சி அதிகாரத்தை பரப்ப முயன்றமையும் இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமையும் சமகால நிகழ்வுகளாகும். இது இங்கிலாந்திற்கு நன்மையினையும் இந்தியாவிற்கு பெரிய பாதிப்பினையும் ஏற்படுத்தியது. 1757இல் கம்பெனி இந்தியாவைக் கைப்பற்றியது. 1760ல் இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமையும் சமகால நிகழ்வுகளாகும். இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நடவடிக்கையால் பருத்தி நெசவு தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ளமை பற்றியும் அது கம்பெனியால் நெருக்குதலுக்கு உட்படுத்தப்படுகிறது என்பது பற்றியும் வங்காளத்தின் ஆளுநரால் சுட்டிக்காட்டப்பட்ட போதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படாமையால் இந்தியாவின் பருத்தி நெசவு கைத்தொழில்

*தீவிரமாகப் பாதிக்கப்பட்டது. இந்நிலையிலேயே எதிர்பாராத திருப்பமொன்று இங்கிலாந்தில் ஏற்பட்டது. அதாவது இங்கிலாந்தில் சமகாலத்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டது. இது இந்தியாவின் கைத்தொழிலுக்கு பலத்த நெருக்கடியை ஏற்படுத்தியது. இதன் காரணமாக நலிவடைந்திருந்த இந்தியாவின் பருத்தி நெசவு கைத்தொழில் மேலும் பாதிக்கப்பட்டது. அதாவது இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி பருத்தி நெசவிலேயே ஆரம்பிக்கபட்டதால் இந்தியாவின் பருத்தி நெசவுக் கைத்தொழில் மேலும் பாதிக்கப்பட்டது. அதேவேளை இங்கிலாந்தில் மாத்திரமின்றி ஐரோப்பிய நாடுகளிலும் இச்சந்தர்ப்பத்தில் இந்திய பருத்திக்கான தேவை அதிகமாக இருந்து இந்தியாவின் பருத்தி நெசவு வீழ்ச்சியடைந்திருந்ததால் கேள்விக் கேற்றவாறு நிரம்பல் செய்ய முடியவில்லை. இதே காலப்பகுதியில் இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியால் பருத்தி நெசவுக் கைத்தொழில் பெருமளவில் அதிகரித்தது.*

*இங்கிலாந்தில் ஜென்னி, மியூல், பவர்லூம் போன்ற இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை பருத்தி நெசவு உற்பத்தி அதிகரித்தமைக்கு காரணமாயின. இக்கண்டுபிடிப்புக்களை அடுத்து 1785 இல் இங்கிலாந்தின் ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி நெசவுப் பொருட்கள் மாதிரிக்காக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதே வேளை 1788இல் ஆலை அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி நெசவும் பொருட்களுடன் இந்திய பருத்தி நெசவு போட்டியிட தயார் செய்யப்பட்டது. இந்த போட்டியானது இந்தியாவின் ஐரோப்பிய சந்தைகளை இங்கிலாந்தில் கைப்பற்றுவதற்கு உதவியாக அமைந்தது. இந்தியாவினுள் இங்கிலாந்தின் பருத்தி போட்டியிட ஆரம்பித்தது.*

*இங்கிலாந்தின் கைத்தொழில் முகவர்கள் பல ஐரோப்பிய நாடுகளிலும் தமது கைத்தொழில் பொருட்களை விற்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனால் ஐரோப்பிய நாடுகளில் இந்திய பருத்திக்குப் பதிலாக இங்கிலாந்தின் பருத்திப் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் முன்னர் போல் இந்திய பொருட்களை விற்க முடியாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக கம்பெனியின் இலாபத்தில் ஒரு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. உண்மையிலேயே இத்தகைய போட்டி நிலைகைளில் இந்தியா மிக மோசமாக தோற்றுப்போனாலும் கம்பெனி நினைத்திருந்தால் இந்தத் தோல்வியிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றியிருக்க முடியும். கம்பனி இலாபத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டும் கம்பனி இதற்கு எதிராக எத்தகைய நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை காரணம் அவ்வேளையில் இங்கிலாந்தில் உருவாகிய புதிய கைத்தொழிலாளர்வர்க்கம் பலம் பொருந்தியதாகக் காணப்பட்டமையால் அவர்களுக்கு பணச்சுமை ஏற்படுத்த கம்பெனி விரும்பவில்லை. மேலும் இதற்கெதிராக ஏதாவது நடவடிக்கை எடுத்து அதன் மூலமாக இங்கிலாந்து பாராளுமன்றத்தின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொள்ளவும் கம்பனி விரும்பவில்லை. இதன் இறுதி விளைவாக வெகு வேகமாகவே ஐரோப்பிய சந்தையை இந்தியா இழக்கத் தொடங்கியது. இதேவேளை இங்கிலாந்தின் கைத்தொழில் முதலாளிகள் இங்கிலாந்தின் பருத்திப் பொருட்களை இந்தியாவில் விற்பனை செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலாபமீட்ட முயன்ற வர்த்தகக் கம்பெனிக்கு பொருட்களைத் தாமே கொள்ளவு செய்து விற்பனை செய்ய தீவிரமாக ஈடுபட முயற்சித்தது. இந்நடவடிக்கையின் மூலம் கணிசமான அளவு இலாபமீட்டலாம் என்றும், இதன் மூலம் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தை மகிழ்ச்சிப்படுத்த முடியும் என்றும் நம்பியது. ஏனெனில் பாராளுமன்றத்தின் ஆதரவை கம்பெனி எதிர்பார்த்தது. காரணம் இக்கம்பெனிக்கும் அரச பட்டயத்தின் மூலமே வர்த்தக உரிமை வழங்கப்பட்டது. அதுமட்டுமின்றி காலத்திற்குக் காலம் பட்டயம் புதுப்பிக்கப்பட வேண்டி இருந்தது. எனவே பாராளுமன்றம் நினைத்தால் கம்பெனியின் தனியுரிமையை ரத்துச் செய்யலாம். இதனால்தான் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழக்க கம்பெனி விரும்பவில்லை.*

*பிரிட்டன் 1813க்குப் பிறகு இந்தியாவின் மீது ஒரு வழி தாராள வர்த்தக கொள்கையை திணித்தது. இரயில்வே நிறுவப்பட்டதை தொடர்ந்து இந்தியாவின் தொழிற்துறை குறிப்பாக கிராமப்புற கைத்தொழில் துறை மிக வேகமாக வீழ்ச்சியுற்றது. 1813இல் பாத்தியம் 108 ன் படி இங்கிலாந்தின் பொருட்கள் இந்திய சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டன. இங்கிலாந்தின் பருத்திப் பொருட்கள் இந்தியாவில் குறிப்பாக விற்கப்பட்ட வேளை தொடர்ந்து இந்திய வர்த்தகம் கம்பெனிக்கு மாத்திரமன்றி இங்கிலாந்தின் எல்லா வர்த்தகங்களுக்கும் திறந்து விட*

வேண்டுமென வர்த்தகர்கள் பாராளுமன்றத்துக்கு கோரிக்கை விடுத்தனர். இதேவேளை 1813இல் கம்பெனிக்கிருந்த தனியுரிமை நீக்கப்பட்டது. இதிலிருந்து இந்திய மண்ணில் எந்தவொரு வர்த்தகரும் போட்டியிட்டு வர்த்தகம் செய்யலாம் என்றாகியது. ஆரம்பத்திலிருந்தே கம்பனி பாராளுமன்றத்தை திருப்திப்படுத்த முயன்றாலும் இறுதி விளைவாகத் தோல்வி அடைந்தது. அதாவது இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சிக்கு முன்பே இந்திய மண்ணில் கம்பெனி நடவடிக்கையால் பருத்தி நெசவுக் கைத்தொழில் நலிந்து போயிருந்தது. இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியும் இந்தியாவின் பருத்தி நெசவுக் கைத்தொழிலை மேலும் மோசமடையச் செய்தது. மேலும் இங்கிலாந்தின் எல்லா வர்த்தகர்களும் இந்தியாவில் வர்த்தகம் செய்ய ஆரம்பித்தமை இந்தியாவின் பருத்தி நெசவுக் கைத்தொழிலை மேலும் மோசமடையச் செய்தது. ஏற்கெனவே கம்பெனியை மட்டும் சமாளிக்கவேண்டி இருந்த இந்தியா தற்போது ஏனைய வர்த்தகர்களையும் சமாளிக்க வேண்டி இருந்தது.

1833 இல் இங்கிலாந்தில் மீண்டும் பட்டயச்சட்டம் புதுப்பிக்கப்பட்ட வேளை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய மண்ணிலான வர்த்தக உரிமை பூரணமாக பறிக்கப்பட்டது. மேறக்கொண்டு இந்தியாவில் வர்த்தகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அதாவது இந்தியாவில் ஒரு ஆட்சியாளனாக மட்டுமே கம்பனி இருக்க வேண்டும் வர்த்தகனாக அல்ல. எனினும் மீண்டும் 1857இல் பட்டயச் சட்டம் புதுப்பிக்கப்பட்டவேளை கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தியாவுடனான ஆட்சிப் பொறுப்பும் பறிக்கப்பட்டது. இதன்பின் இந்தியா பரிபூரண முடிக்குமே குடியேற்ற நாடகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் 1880 களில் ஆலை அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்திப் பொருட்கள் இந்திய பருத்தியுடன் போட்டியிடுவது கடினமாக இருந்தது. ஆரம்பத்தில் ஆயஉொநளவநச பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்திப் பொருட்கள் கரடுமுரடு உடையவையாகக் காணப்பட்டது. எனினும் காலப்போக்கில் தரமான பருத்தியாடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் பேரளவான உற்பத்தி இடம் பெற்றதால் உற்பத்திச் செலவுகள் வேகமாக வீழ்ச்சியடைந்தன. இதனால் விற்பனை விலைகள் வீழ்ச்சியடைந்தன. இதனால் தர உயர்வும் விலை வீழ்ச்சியும் உள்ள பொருட்கள் இந்தியாவில் போட்டியிடக் கூடிய வாய்ப்பும் ஏற்பட்டது. இதனால் தவிர்க்கமுடியாதவாறு இந்திய பருத்தி நெசவுக் கைத்தொழில் வீழ்ச்சியடைந்தது. மேலும் இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியே ஆட்சியாளனாகவும் இருந்ததால் இங்கிலாந்தின் பருத்திப் பொருட்கள் எவ்விதத் தீர்வையும் இன்றி இந்தியாவில் ஏற்றுமதி செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் இந்திய மண்ணில் குறைந்த விலையில் இங்கிலாந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. கம்பெனி தனது இலாபத்தை பெருக்குவதற்காக இந்தியாவிலிருந்து பருத்தியை குத்தகை மூலம் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்தது. இவ்வகையில் தஞ்சாவூர், திருநெல்வேலி பகுதியிலிருந்து தரமான பருத்தி இங்கிலாந்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதன்மூலம் கம்பெனி அதிகமாக இலாபத்தை பெற முயற்சித்தது. கிராமப்புறங்களிலிருந்து மூலப்பொருட்கள் வெளியேறின. உள்ளூர் தொழில்களுக்கு மூலப்பொருட்கள் கிடைக்கவில்லை தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆலைகளுக்கு தரகர்கள், முகவர்கள் மூலம் பெரும் அளவில் கொள்முதல் செய்ததால் கிராம கைவினைஞர்களால் போட்டிப் போட்டு மூலப்பொருட்களை வாங்க முடியவில்லை. நெசவாளர்கள் பாதிக்கப்பட்டனர். நூலைக் கொண்டு துணி வாங்கிய மக்கள் பணத்தை கொடுத்து துணி வாங்க நேர்ந்தது என்பதால் காலப்போக்கில் அவற்றை கைவிட்டனர். இதனால் ஆலை விலைப் பயன்படுத்தி கைத்தறி துணி உற்பத்தி செய்ய வேண்டியதாயிற்று.

கம்பெனியின் திறனற்ற சுயநோக்கம் கொண்ட பொருளாதார நடவடிக்கை காரணமாக இந்தியாவின் சிறுகைத் தொழில்களில் படிப்படியாக நலிவடைந்து வீழ்ச்சியடைந்தன. இந்தியாவின் சிறு கைத் தொழில்களில் பெரும்பாலானவை ஏற்றுமதிக்கென்று ஆரம்பிக்கப்பட்டவையாகும். இவ்வகையில் பருத்தி, பட்டு, ஔறிச்சாயம் என்பன முக்கியமான கைத்தொழில்களாகும். அத்துடன் ஏற்றுமதி சம்பந்தப்படாத சுதேச சிறு கைத்தொழில்களும் வீழ்ச்சியடைந்தன. இங்கிலாந்தின் கைத்தொழில் புரட்சி பருத்தி நெசவுடன் ஆரம்பித்தாலும் காலக்கிரமத்தில் இரும்பு உருக்கிலும் மாற்றம் ஏற்படவே பெருந்தொகையான இரும்பு உருக்குப்

பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. குறிப்பாக கத்தி, கோடரி, மண்வெட்டி போன்ற பொருட்கள் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டதால் கொல்லர்களின் உற்பத்தி நடவடிக்கைகள் பெரிதும் முடங்கிப் போயின. மேலும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பித்தளை மண்பாண்டத்திற்குப் பதிலாக இங்கிலாந்தின் ஆலைகளில் கவர்ச்சியாகவும், மலிவாகவும் உற்பத்தி செய்யப்பட்ட அலுமினியப்பொருட்கள் மலிவான விலையில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டதால் குயவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எண்ணெய் வகைகள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதால் தேங்காய் எண்ணெய் வடிப்போரின் தொழிலும் இந்தியாவில் பாதிக்கப்பட்டது. இவ்வாறு இந்தியாவின் ஏற்றுமதி சிறுகைத் தொழில்களும், கிராமிய பொருளாதார நடவடிக்கைகளும் பெருமளவில் முடங்கிப் போயின.

## 5. இப்போக்கினை தீவிரப்படுத்திய காரணிகளை

1. இறக்குமதிப் பொருட்களின் விலைகள் மலிவாகவும் கவர்ச்சித்தன்மை வாய்ந்ததுமாக இந்தியச் சந்தையை இலகுவில் பிடித்தது.

2. தீர்வையில்லாமல் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் மலிவான விலையில் பொருட்கள் விற்கப்பட்டன.

3. இங்கிலாந்தின் புகையிரதப் போக்குவரத்து, கடல்வழிப்போக்குவரத்து என்பவற்றின் அறிமுகம் இந்தியாவினுள் விரைவாகவும் அதிகமாகவும் பொருட்களை இறக்குமதி செய்யமுடிந்தது.

4. இந்தியாவின் கிராமங்களில் பொருட்களைத் தடையின்றி விற்பனை செய்ய முடிந்தமையும் இந்தியாவின் கைத்தொழில் வீழ்ச்சியடைய காரணமாக அமைந்தது.

இங்கிலாந்தின் தரமான, மலிவான இறக்குமதிப் பொருட்களுடன் போட்டியிட முடியாமல் இந்தியாவின் ஏற்றுமதி கைத்தொழில்களும், கிராமியக் கைத்தொழில்களும் வீழ்ச்சியடைந்தது. ஒரு காலகட்டத்தில் சிறுகைத்தொழிலில் முன்னேற்றம் கண்டிருந்த இந்தியா 19ம் நூற்றாண்டில் தூய விவசாய நாடாக மாற்றமடைந்தது. சிறுகைத்தொழிலுடன் பிணைந்திருந்த கைத்தொழில் தொழிலாளர்கள் இந்தியாவில் வேலையற்றோராக்கப்பட்டனர். இதனால் தொடர்புடைய தொழிலாளர்கள் வேலையை விட வேண்டி ஏற்பட்டது. இவ்வாறு வெளியேற்றப்பட்ட தொழிலாளர்கள் விவசாயத்துறையை உறிஞ்சிக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் விவசாயத் துறையிலும் சுமை அதிகரித்தது. இந்தியாவில் பழைய கைத்தொழில்களின் அழிவினால் புதிய கைத்தொழில் யுகம் ஏற்படவில்லை. இந்தியாவில் வகுக்கப்பட்ட, பொருளாதாரக் கொள்கைகள் இங்கிலாந்தின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற பொருளாதாரக் கொள்கையாகக் காணப்பட்டது.

## 6. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியும் விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றமும்

இந்தியாவில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகள் பாதிக்கப்பட்டதால் இவ்விரு துறைகளிலும் பாதிக்கப்பட்ட மக்களை விவசாயத் துறை தாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில் பொருளாதாரமானது மரபு ரீதியான கைத்தொழில்களை முற்றாக அழித்தது மாத்திரமன்றி இந்தியாவின் விவசாயத் துறையையும் மிக மோசமாகப் பாதித்தது. கைத்தொழில் வர்த்தகத் துறைகளுக்கிடையிலும் ஆங்கிலேயரின் நலனுக்கிடையிலும் மிக நெருங்கிய தொடர்பு இருந்ததனாலே அவ்விரு துறைகளும் பாதிக்கப்பட்டது. அதாவது இந்தியாவின் வர்த்தக வீழ்ச்சியிலேயே ஆங்கிலேயரின் வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. அவ்வாறே இங்கிலாந்தின் கைத்தொழில் வளர்ச்சிக்கு இந்தியாவின் கைத்தொழில் பாதிப்படைந்தது. எனினும் ஆங்கிலேயரின் நலனுக்கும் இந்தியாவின் விவசாயத் துறைக்குமிடையில் தொடர்புகள் காணப்படாமல் இருந்தும் கூட ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியாவின் விவசாயத்துறை பெரிதும் பாதிப்படைந்தது. இதற்குக் காரணம் கம்பெனி இந்தியாவின் ஆட்சியாளனாக தன்னை நியமித்துக் கொண்டதும், நிலவரிவருமானங்களை திரட்டுவதற்காக அடுத்தடுத்து அமுல் செய்யயப்பட்ட நிலத்தீர்வுச் சட்டங்களுமேயாகும்.

1787ம் ஆண்டு பதவிக்கு வந்த ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி வங்காளத்தின் வெற்றிக்குப் பொறுப்பாக இருந்தவரை(இராபர்ட் கிளைவ்) கவர்னராக நியமித்தது. இவரின் ஆட்சியில் வங்காளத்தில் நிலவரி தொடர்பாக ஏற்கெனவே இருந்துவந்த நடைமுறைகளைப் பயன்படுத்தி அதனை இயன்ற வரை அதிக வருமானம் கிடைக்கும் ஒன்றாக மாற்றிக் கொண்டார். அவ்வேளை நிருவாகத்திற்கு பல செலவுகள் ஏற்பட்டது. அத்துடன் மொழிப் பிரச்சினை, போக்குவரத்து வசதியின்மை போன்ற பிரச்சினைகளையும் அரசு எதிர்கொண்டது. எனவே கம்பெனிக்கு அதிகளவு நிருவாகச் செலவுகளை ஏற்படுத்தாத ஒரு நிலவரிச் சேகரிப்பை உருவாக்கும் நடைமுறைகளைப் பின்பற்றியது. இவ்வகையில் 1762ம் ஆண்டு நிலவரிச் சேகரிப்பின் ஆரம்பகட்ட பரிசோதனைக்காக ஏற்படுத்திய நிலவரி சேகரிப்பு முறை 1793 வரை நீடித்தது. விவசாயத் துறையிலிருந்து ஆங்கிலேயர் பின்பற்றிய நிலவரி முறைகள் பல்வேறுபட்டது.

1. 1762 தொடக்கம் 1792 வரையான முதலாம் கட்ட காலப்பகுதி
2. 1793 தொடக்கம் 1947 வரையான இரண்டாம் கட்ட காலப்பகுதி

முதலாவது கட்டத்தில் 3 வேறுபட்ட நிலத்தீர்வு முறைகள் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியினரால் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் 3 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் தீர்வுச் சட்டங்களும், அடுத்து 5 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் நிலத்தீர்வுச் சட்டங்களும் இறுதிப்பகுதியில் வருடாந்த நிலத்தீர்வுச் சட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. 3 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் நிலத்தீர்வுச் சட்டம் கிளைவ்-ன் ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. வரிசேகரிப்பு உரிமையினை ஆங்கிலக் கம்பெனி பொது ஏலத்தில் விற்பனை செய்தது. இவ்வேலத்தில் பங்கு கொண்டு ஆகக் கூடுதலான வரியைச் செலுத்துவதற்கு ஒப்புக் கொள்கிற வரை அப்பகுதியில் வரிசேகரிப்புக்குப் பொறுப்பாக அமர்த்தினர்.

இதன் பிறகு 1792 இல் Hastings என்பவர் வங்காளத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின்னர் வரி சேகரிப்பு தொடர்பாக புதிய சட்டமொன்றை நிறுவினார். இது 3 வருடத்திற்குப் பதிலாக 5 வருட நீடிப்பைக் கொண்டது. இங்கும் ஏலத்தின் மூலமாகவே அனுமதி வழங்கப்பட்டது. இதன்மூலம் கம்பெனி இயன்ற அளவு நிருவாகச் செலவினை குறைக்க நினைத்தது. இம்முறையின் கீழும் பிரச்சினைகள் தீவிரமடைந்தன. ஒப்புக் கொண்ட தொகை செலுத்தப்படவில்லை. மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டதால் மக்களிடமிருந்து பெரிய அதிருப்திகள் ஏற்பட்டன. இதன் பின்னர் 1797ம் ஆண்டில் வருடாந்த வரிசேகரிப்பு முறை பின்பற்றப்பட்டது. இதில் நிலம் ஏலத்தில் விற்கப்படவில்லை. பரம்பரையாக நிலத்தை வைத்திருந்த ஜமீன்தார்களே இப்பொறுப்பை ஏற்றனர். இம்முறையின் மூலம் வருடாவருடம் வரிசேகரிப்பாளர்களை கம்பெனி மாற்றியமைக்க வேண்டியிருந்தது. மேலும் இம்முறையில் இருதரப்பினருக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தியதால் புதிய வழிமுறைகளைக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் பின்னர் 1793இல் பதவியேற்ற காரன்வாலிஸ் என்பவர் 22.03.1793இல் ஒரு புதிய முறையினை இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தினார். இதுவே நிரந்தர நிலத்தீர்வு முறையாகும். இது முன்றைய நிலத்தீர்வு முறையுடன் ஒப்பிடும்போது பலவழிகளிலும் மேம்பட்டதாகக் காணப்பட்டது.

இம்முறையானது ஒரிரு வருடங்களுக்கென்றில்லாமல் நிரந்தரமானதாக இருந்தது. வங்காளத்தில் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டு காலக்கிரயத்தில் இந்தியாவின் ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இம்முறையின் கீழ் நிலவரி வருமானத் தொகை நிரந்தரமானதாக இருந்தது. இதன்படி 10∴11, வீதம் கம்பனிக்கு வழங்க வேண்டும் (1∴11) பதினொன்றில் ஒரு வீதம் ஜமீன்தாரை சென்று அடையும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டது. கம்பெனியானது ஏற்கெனவே கூறிய வரிசேகரிப்பு முறையில் நபரை தெரிவு செய்ய பெருந்தொகையான பணத்தை செலவு செய்தது. எனினும் இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட ஒரு வரித்தொகை தனக்கு நிச்சயம் கிடைக்கும் என எதிர்பார்த்தது. இவ்வகையில் இம்முறையானது கம்பெனிக்கு திருப்தியளித்தது. எனினும் இந்நிரந்தர நிலத்தீர்வுச்

சட்டமானது பல சிறப்பம்சங்களையும் பல குறைபாடுகளையும் காலக் கிரயத்தில் தோற்றுவித்தது.இதற்குப் பின்னர் வேறு புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றில் 2 சட்டங்கள் குறிப்பிடக்கூடியதாகக் காணப்படுகின்றன. இவை இந்திய தொடர்பாக கம்பெனியால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

1. மகல்வாரி கிராம நிலத்தீர்வு முறை
2. சுதந்திரக் குடியானவன் முறை

பிரித்தானியரால் அறிமுகப்பட்ட இம்முறையானது மெட்ராஸ், பம்பாய் ஆகிய பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறையின் கீழான நிலவரி ஒழுங்குபாடானது அரசாங்கத்திற்கும் தொடர்புடைய உழவனுக்கும் நேரடியானதாக இருந்தது. இடைத்தரகர்கள் இங்கு இருக்கவில்லை. இதற்கு முன்னர் காணப்பட்ட அனைத்து முறையிலும் இடைநிலையாளர்கள் காணப்பட்டனர். இதன் சிறப்பம்சம் யாதெனில் நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னரே விளைச்சலில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் நிலங்களில் விளைவிக்கக்கூடிய பயிர்களும் அறிந்து கொள்ளப்பட்டன. உற்பத்தி செய்யக்கூடிய விளைச்சல் பண வெகுமதிக்கு மாற்றீடு செய்யப்பட்டு அதன் பின்னர் பயிர்களை உற்பத்தி செய்ய ஏற்பட்ட சராசரிச் செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவை கழித்து வரக்கூடிய தேசிய வருமானம் கணிக்கப்பட்டு அத்தேசிய வருமானத்தின் அரைப் பங்கினை அரசாங்கத்திற்கு நிலவரியாகச் செலுத்த அனுமதி வழங்கியது. இம்முறை விவசாயிகளுக்குத் திருப்தியளிப்பதாக செய்யப்பட்டது. இதன் சிறப்பம்சமாகும் அரசாங்கத்துக்கும் குடியானவர்களுக்குமிடையில் நேரடித் தொடர்பு காணப்பட்டது. சுலழவ எனப்படும் தனிப்பட்ட விவசாயிகள் நிலஉடைமை தொடர்பாக விவரணப் பதிவேடுகள் இருந்தன. ஒவ்வொரு விவசாயியும் பரம்பரை அடிப்படையில் தம்முடைய வாரிசுகளுக்குக் கையளிக்கும் உரிமையையும் இம்முறையின் கீழ் முறையான பதிவேடுகள் மூலம் நிர்வகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனினும் இம்முறையிலும் தக்காரர் வரி செலுத்தத் தவறினால் தொடர்புடைய நிலம் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வாறாக இந்திய விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாயினர். தங்கள் வருமானத்தில் பெரும்பகுதியை வரியாக செலுத்த வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாயினர். விவசாயத்தில் ஏற்பட்ட பாதிப்பு ஒட்டுமொத்த இந்திய பொருளாதாரமே பாதிப்புக்குள்ளாகியது.

## 7. முடிவுரை

இவ்வாறாக, கி.பி. 1600ம் ஆண்டுகளில் துவங்கிய ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் பயணம் இந்திய பொருளாதாரத்தை மட்டுமின்றி சமூக மற்றும் அரசியல் தளங்களில் மிகப்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. உலகிற்கே ஆடை வழங்கிய இந்திய நெசவாளர்கள் ஆங்கிலேயரின் படிப்படியான பொருளாதாரக் கொள்கைகளாலும், புதிய இயந்திரக் கண்டுபிடிப்புகளாலும் தங்கள் தொழிலை இழந்து வறுமையில் வாடினர். இந்திய மூலப்பொருட்கள் இங்கிலாந்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஆடையாக உற்பத்தி செய்த பின் விற்பனை செய்யும் சந்தையாக இந்தியா மாற்றப்பட்டது. கை நெசவு தொழிலாளர்கள் தங்கள் தொழிலை விட்டுவிட்டு கூலிகளாக மாறிப்போயினர். இதேபோல் ஆங்கிலேயரின் தவறான விவசாய கொள்கைகளால் இந்திய விவசாயம் அடியோடு பாதிக்கப்பட்டது. இவ்வாறாக இந்திய பொருளாதாரம் ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டு இங்கிலாந்தில் குவிக்கப்பட்டது மிகப்பெரும் சோகமாகும்.

இவ்வாறாக இந்திய பொருளாதாரத்தில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஆங்கில ஆட்சி 1947ல் இந்தியாவை விட்டு சென்ற போது இந்திய கைத்தொழிலும், விவசாயமும் மிகவும் பாதிக்கப்பட்டே இருந்தது என்பது மறுக்க இயலாத உண்மையாகும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

சந்திரா, பி. (2010). *நவீன கால இந்தியா*. சென்னை: நியூ செஞ்சுரியுக் ஹவுஸ்.

சுப்ரமணியன் ந. (2010). *இந்திய வரலாறு*. சென்னை: நியூ செஞ்சுரியுக் ஹவுஸ.

குருசாமி மா. பா. (2009). *காந்தியப் பொருளியல்*. சிவகாசி: குரு தேன்மொழி தாயன்பகம்.

மணிக்குமார் கா.சு. (2006). *1930 களில் தமிழகம், பொருளாதார பெருமந்தம் - ஓர் ஆய்வு*. சென்னை: அலைகள் வெளியீட்டகம்.

Tapan, R.C., & Irfan, H. (2006). *Economic History of India*. New Delhi: Orient longman Private Limited.